**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**

## STC. 152/2024

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 09-06-2026-ஆம் நாளாகிய இன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 09.06.2026 | சாட்சி | ம.சா.1 |
| பெயர் | திருமதி.மகாலட்சுமி | வயது. | 47 |
| க/பெ. | திரு.செந்தில்குமார் | | |

**முறையீட்டாளர் தரப்பில் முதன்மை விசாரணை -**

நான் இவ்வழக்கில் முறையீட்டாளர். ம.சா.1-ஆக சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.எனது பிரமாண வாக்குமூலத்தை என் முதன்மை விசாரணை சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 26-06-2023 | என் பெயருக்கு எதிரி தனது வங்கியான பரங்கிப்பேட்டை இந்தியன் வங்கி கிளையின் காசோலை எண்.616509 -அசல். | ம.சா.ஆ.1 |
| 2. | 26-06-2023 | நான் கணக்கு வைத்துள்ள வங்கியான பரங்கிப்பேட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் எதிரியின் வங்கி காசோலை PAYMENT STOPED BY DRAWER என்று திருப்பி அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்தி ரிட்டன் மெமோ- அசல். | ம.சா.ஆ.2 |
| 3. | 18-08-2023 | நான் கணக்கு வைத்துள்ள பரங்கிப்பேட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் எதிரியின் வங்கி காசோலை NON CHEQUE ACCOUNT என்று திருப்பி அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்தி ரிட்டன் மெமோ- அசல். | ம.சா.ஆ.3 |
| 4. | 21-08-2023 | எதிரிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு-அலுவலக நகல். | ம.சா.ஆ.4 |

| | | | |
|---|---|---|---|
| 5. | 22-08-2023 | எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை - அசல் | ம.சா.ஆ.5 |

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(S/D.Thiru.D.Yuvaraj)
District Munsif cum Judicial Magistrate,
Portonovo.